

மதுரை மாநகர் தெற்கு தொகுதி மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகத்தில் கழக கூட்டணி ம.தி.மு.க. வேட்பாளர் பூமிநாதன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை தேர்தல் அதிகாரியிடம் வழங்கினார் உடன் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி.சு.வெங்கடேசன், தி.மு.க. மாநில தணிக்கை குழு உறுப்பினர் வேலுச்சாமி, காங்கிரஸ் மலர் பாண்டியன் ஆகியோர் உள்ளனர்



அமைச்சர் பெ. கீதா ஜீவன் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் சென்று வேட்பு மனு தாக்கல் செய்தார். அருகில் காங்கிரஸ் கமிட்டி குழு துணைத் தலைவர் ஏ.பி.சி.வி. சண்முகம் உள்ளார்.




இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் முன்னாள் அமைச்சர் சத்தியமூர்த்தி, தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் சிங்கை சின்னா, காங்கிரஸ் பிரமுகர் வழக்கறிஞர் சரவணா காந்தி உட்பட கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மதுரை மத்திய தொகுதி கழக வேட்பாளர் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் மதுரை மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் கழகத்தினர் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் சென்று தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.





திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளராகப் போட்டியிடும் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் திண்டுக்கல் கோட்டாட்சியர் அலுவலரிடம் வேட்பு மனுத் தாக்கல் செய்தார். உடன் முன்னாள் திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் செல்வராகவன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகி மைதீன் பாவா ஆகியோர் உள்ளனர்.




நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளரும் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளருமான மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் மரு.மோனிகா ராணாவிடம் வேட்பு மனுத் தாக்கல் செய்தார். உடன் காங்கிரஸ் மாவட்ட தலைவர் ராமேஸ்வரன் சி.பி.எம்.பழனி, ம.தி.மு.க. நிஜாம், நெல்லையப்பர் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செல்லையா ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா க.அ. இராசப்பா
### ஏப்ரல் 7 (1993)



கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராக இருந்தவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணியில் குமரி மாவட்டத் தலைவராகவும், பின்னர் மாவட்ட கழகத் துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக பாளையங்கோட்டை சிறையில் ஒரு வருடம் இருந்தவர்.

1986ல் நடைபெற்ற சட்ட எரிப்பு போராட்டத்தின்போது நெஞ்சு வலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் “செந்தமிழுக்கு ஒரு தீங்கு வந்த பின் இந்த தேகம் இருந்தென்ன லாபம்” என சொல்லி மருத்துவமனையிலிருந்து சிறைபுகுந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சிவகங்கை மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள்

# அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - ஆர்.தமிழரசி - கருணாஸ் - எஸ்.மாங்குடி வேட்பு மனு தாக்கல்!

சிவகங்கை. ஏப். 7 –

தமிழகத்தில் வருகிற 23ம்தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 234 சட்டமன்ற தொகுதியிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளார்கள். இதில் சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர், சிவகங்கை, காரைக்குடி, மானா மதுரை ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகள் உள்ளது . சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மாவட்ட கழக செயலாளர் கூட்டு றவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் ஐந்தாவது முறையாக தனது வேட்புமனுவை தேர்தல் அலுவலர் சிவபாலனிடம்

தாக்கல் செய்தார். மாற்று வேட்பாளராக அவரது மனைவி திருமதி பிரேமா பெரிய கருப்பன் செய்தார். இவருடன் மாநில கழக செய்தி தொடர்பு துணைத்தலைவர் மருது அழகுராஜ், காங்கிரஸ் பன்னீர், தனசேகர் தே.மு.தி.க. வழக்கறிஞர்கள் எஸ்.பாஸ்கரன், முத்துராமலிங்கம் ஆகியோர் சென்றார்கள்.

2.மானாமதுரை மானாமதுரையில் இரண்டாவது முறையாக போட்டியிடும் சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் மானாமரை வட்டாட்சியர் அலுவலகத்தில் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார் மாற்று வேட்பாளராக ரவிக்குமார் வேட்புமனுத் தாக்கல் செய்தார்.


3. சிவகங்கை. சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் முக்குலத்தோர் புலிப்படை சார்பில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் நடிகர் கருணாஸ் தனது வேட்புமனுவை சிவகங்கை கோட்டாட்சியர் செல்வி ஜெபியா கிரேஸிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார் .

4. காரைக்குடி சட்டமன்ற தொகுதியில்இரண்டாவது முறையாக போட்டியிடும் வேட்பாளர் எஸ். மாங்குடி தனது வேட்புமனுவை தேவகோட்டை சார்ஆட்சியர் ஆயுஷ் வெங்கட்டிடம் தாக்கல் செய்தார். நான்கு மாவட்டங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வேட்பாளர்களை கூட்டணி கட்சியினர் மாலை,சால்வை அணிவித்து வாழ்த்து கூறினார்கள் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், வழக்கறிஞர். அ. கணேசன் முன்னாள் எம்.எல்.ஏ க்கள் சுப.மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, மருத்துவர் கோகுலகிருஷ்ணன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, பி.டி.ஆர்.முத்து, ந.அம்பல முத்து.

மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி .ராஜ்குமார் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் தோழர் திருமதி ஹேமலதா செந்தில், முன்னாள் அமைச்சர் ஒன்றிய செயலாளர்கள் எஸ். சண்முகவடிவேல் விராமதி மாணிக்கம், பி.செல்வராஜ், பூமணி, கே பாலசுப்பிரமணியன், குன்னக்குடி சுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன், நாகனிரவி, வழக்கறிஞர் வே.பூபால சிங்கம், அமைச்சர் பெரிய கருப்பன் திருப்பத்தூரில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.வி.பி. ஆசைத்தம்பி
### ஏப்ரல் 7 (1979)



கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகவும், கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில் சட்டப்பேரவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்டவர்.

பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலேதான் வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட இவரை வாலிபப் பெரியார் என்று நண்பர்கள் – தோழர்கள் அன்போடு அழைப்பார்கள்.

“கழகத்தின் கருவூலம், தன்மான இயக்கத்தின் சிங்கம், தந்தை பெரியாரின் மாணவர், பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத்தம்பி, எனக்கு உற்ற தோழர்” என தலைவர் கலைஞர் தனது உரையில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**